







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 3 15.01.2025







ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# இந்த வாரம்..... உள்ளே....

1. குருபரம்பரையை ஸேவிக்கவேண்டும்
2. ஆக்கூர் ஆண்டவனின் திருவாக்கு
3. ஸ்ரீவிஷ்ணுபுராணம்
4. ஸ்வாமி தேசிகனின் கீதார்த்த ஸங்கிரஹம்
5. யோகமும் க்ஷேமமும்
6. இதர முத்துக்கள்

*****




# 1.குருபரம்பரையை ஸேவிக்கவேண்டும்

**गुरुभ्यः तद्गुरुभ्यश्च नमोवाकमधीमहे।**
**वृणीमहे च तत्राद्यौ दम्पती जगतां पती ॥**

**ஆபகவத்த: ப்ரதிதாமநகாம் ஆசார்ய ஸந்ததிம் வந்தே** என்று ஸ்வாமி தேஸிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில் குருபரம்பரையிலுள்ள எல்லா ஆசார்யர்களையும் அநுஸந்தானம் செய்து பபிஷ்யர்களும் அப்படியே அநுஸந்திக்கவேண்டுமென்று அருளிச்செய்துள்ளார். எம்பெருமான் தொடக்கமாக அவரவர்கள் ஆசார்யர்கள் வரை அந்த குருபரம்பரையை ஸேவிக்கவேண்டும். இவற்றை தினந்தோறும் அநுஷ்டிக்க வேண்டியது சிஷ்யர்களின் கடமை. விஸேஷமாக பூர்வாசார்யர்களின் திருநக்ஷத்திரம் முதலான உத்ஸவகாலங்களில் வேதபாராயணம், ஸேவாகால தொடக்கம், சாற்றுமுறை, ஸம்பாவனைக்ரமம் முதலியவைகள் கண்டிப்பாக ஸேவிக்கவேண்டும்

....ஸ்ரீ ஸ்ரீ வராஹமஹாதேசிகன்





# 2.ஆக்கூர் ஆண்டவனின் திருவாக்கு

## ஸ்ரீ ரங்கநாத பாதுகா இதழிலிருந்து

**ஆண்டவன் சிஷ்யரிடம் ::** ஆசார்யாள் திவ்ய கருணையால் இங்கு அதிருஷ்டம் செய்து கொள்ளும் பக்தர்கட்கு பலவித அபேக்ஷை கைகூடுகிறது. இங்கு நீங்கா வியாதியஸ்தர்கள் ப்ரபத்தி செய்து கொண்டு தமது வியாதி நீங்கப் பெறுவதுண்டு. வெகு காலம் கல்யாணமாகாத பிரும்மசாரிகள் பரந்யாசம் செய்து கொள்வதால் ப்ரதிபந்தமாக இருந்த பாபம் விலகி அழகாகக் கல்யாணமாகித் தம்பதியாக வந்து தெண்ட னிட்டுப் போவதையும் பார்க்கிறேன். நேற்றுபார். முன் வேலை கிடைக்கவில்லை என்று பிரபத்தி செய்து கொண்டு ஒரு மாதமாகவில்லை. வேலை கிடைத்து விட்டதென வந்து தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டுப் போகிறான். அதோடு மட்டுமல்ல ஆசார்யாள் அனுக்கிரகத்தால் இழந்த பொருளைப் பிரபத்தி கூட்டுவைக்கும் பயங்கரமான பலவித பிணிகளையும் போக்கும். பிதிரார்ஜிதப் பொருளுடன் வேறு பல சொத்துக்களையும் பெற வைக்கிறது. 'குலந்தரும் செல்வம் தந்திடும்' என்ற பாசுரத்தைக் கேட்டிருக்கிறாய் அல்லவா? அது அந்த அஷ்டாக்ஷரத்தின் பிரபாவத்தைப் பேசுகிறது. அதுவும் உனக்கு உபதேசமாகி விட்டது. அதன்றி அவ்வச்சுதனையே அடைக்கலமாகிக் கொண்டால், அவனது தாஸனானால் இவைகள் கிடைப்பதற்கென்ன தடை! மற்றும் சங்கா தோஷம் நீங்கவும் இங்கு தங்கி சரணாகதி செய்து கொண்டு போகிறார்கள். இதுபோல் எத்தனையோ எண்ண முடியாப் பலவித பயன்களை அளிக்கும் பிரபத்தி.

**ஆண்டவன் சிஷ்யரிடம் ::** ஒரு உதாரணம் சொல்கிறேன் கேள். வீட்டில் சமையல் முடிந்தது. சாப்பிடும் நேரம் அது சமயம் உன் ஸம் ஸாரத்தினிடம் சென்று சாப்பிடச் சென்றதும் ஒவ்வொன்றாக இலைபோடு தீர்த்தம் எடுத்து வை, பிரசாதம் போடு என்று ஒவ்வொன்றாகக் கேட்க வேண்டுமா ? உன்தேவை அவளுக்குத் தெரியுமல்லவா ? அதேபோல் ஸர்வக்ஞனான பகவானிடம் நீ வேண்டிக் கொள்ளாமலே ப்ரியமான தர்மபத்னி ஒருவள் உன் உடலுக்கு ஏற்கும் உத்தமமான உணவை உரிய அளவு அளிப்பதுடன் ஏற்காத மற்றவற்றை விலக்கி விடுவதேபோல் உன் தேவைகளை நன்கறிந்து எல்லாவற்றையும் அளிக்கச் சித்தமாகவே இருக்கிறான் (நாஹித காரயெ ரி :) ஆகவே தான் இஷ்டகாம்ய பலன்களை இச்சித்து அவனது உள்ளத்தை வீணே நோகச் செய்யாமல் அப்பகவானின் அடிமலர்களில் அன்புடன் பணிந்து நேரம் வாய்த்தபோது ஆராதனைகள் செய்து அவ் வெம்பெருமானின் உள்ளத்தைக் குளிரச் செய்து பணிவதாலேயே சகல இஷ்ட காம்யார்த்தங்களும் பூர்த்தியாகும். அதனால்தான் பெரியோர்கள் ''**பிரபன்னனாக இருப்பவன் போகாதி பலன்களைப் பகவானிடம் யாசியா திருக்கக் கடவன்** " என்று சாதித்து இருக்கின்றனர். நீ கேட்டதில்லையா?

# 3.ஸ்ரீவிஷ்ணுபுராணம்




ஸாத்விக புராணங்களில் முதன்மையானது ஸ்ரீவிஷ்ணுபுராணம். பரதேவதையான எம்பெருமானின் உண்மை நிலையைத் தெளிவாக நாம் அறிந்து கொள்வதற்கு பயன்படக் கூடியது இந்த நன்னூலாகும். இதனை அருளிச் செய்தவர் **ஸ்ரீபராஸர மஹரிஷி** ஆவார். புலஸ்த்யர், ஸ்ரீவஸிஷ்டர் ஆகிய இரண்டு மஹான்களினாலே ஆசீர்வதிக்கப்பட்டு, உலகத்தவர்களின் க்ஷேமத்தைக் கருத்தில் கொண்டு ஸ்ரீபராசரர் அருளிய இப்புராணம் மஹோபகாரமான செயலாகும்.

ஸ்வாமி ஸ்ரீஆளவந்தாரும் தாம் அருளிய ஸ்தோத்ரத்நத்தில் இம் மஹரிஷி செய்த உபகாரங்களையெல்லாம் எடுத்துக் காட்டி, நமஸ்கரித்து அவரை **உதார: (வள்ளல்)** எனப் புகழ்கிறார். மேலும். இதனை **புராண ரத்னம்** எனச் சிறப்பித்துக் கூறுகிறார்.

*****************************************************************************

**ஸமர்ப்பணம் (ஸ்ரீவிஷ்ணுபுராணம்)**

ஸ்ரீவில்லிவலம் 45ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீவிஷ்ணுபுராணம் என்கிற இக்க்ரந்தத்தை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் எழுதி பூர்த்தி பண்ணிய ஸமயம் எழுதிய ஸமர்ப்பணம்}

**मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुषसंश्रय: ।**
**दुर्लभं त्रयमेवैतद् दैवानुग्रहकारकम् ।।**

மநுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ஸ்ரய:
துர்லபம் த்ரயமேவைதத் தைவாநுக்ரஹ காரகம் ||

முதலில் மனிதனாகப் பிறப்பதே அரிது. அதிலும் உண்டியே உடையே என்று உகந்தோடும் இம் மண்டலத்தில் நிலையற்ற பொருள்களை விரும்பாமல் சாஸ்வதமான மோக்ஷ ஸுகத்தில் விருப்பமுடையவனாக (முமுக்ஷுவாக) இருத்தல் மிகவும் அரிது. மனிதப் பிறவியையும் பெற்று மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவனாக இருப்பினும், மகாபுருஷ ஸம்ஸ்ரயம் - ஸதாசார்ய ஸம்பந்தம் கிடைத்தல் மிகமிக அரிது. இம் மூன்றுந்தாம் தெய்வாநுக்ரஹம் தரக்கூடியவை என்கின்றனர் பெரியோர்.

****************

# 4. ஸ்வாமி தேசிகனின் கீதார்த்த ஸங்கிரஹம்
**(உ.வே. யஜ்ஞும் ஸ்வாமியின் வ்யாசத்திலிருந்து)**



'கடுகைத் துளைத்துக் கடலைப் புகுத்த வல்லவர்' என்று ஸ்வாமி தேசிகனுடைய புகழ் தமிழ் இலக்கிய உலகில் பரவியிருக்கிறது. மிகச் சிறிய வாக்கியத்திலும் ஏராளமான ஆழ்ந்த கருத்துகளை அடைக்கிற சாமர்த்தியம் அவருக்கு இருப்பதால், இப்படிப் பாராட்டுகிறார்கள்.

பகவத் கீதையின் கருத்துகளைச் சுருக்கித் தமிழில் வடித்துத் தருகிறது தேசிகரின் கீதார்த்தசங்கிரகம். ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் ஒரே ஒரு செய்யுள். அதில் நாலாம் அத்தியாயத்துக்கான செய்யுளில் இரண்டாம் வரி இதோ:

"துறவாக் கிரிசைகள் தூமதி தன்னால் துலங்குகையும்."

இந்த ஒரே வரியில் (ஐந்தே பதங்களில்) நாலாம் அத்தியாயத்தின் எட்டு முக்கியமான கருத்துகள் அடங்கியிருக்கின்றன.

அவையாவன:

1. கர்மங்களைத் துறக்காமல் பண்ண வேண்டும்.
2. ஜ்ஞானம் என்பது பவித்திரமானது.
3. ஆசையைத் துறந்து கர்மங்களைப் பண்ணுபவன் அறிஞன்.
4. கர்மம் தன்னுள் அடங்கிய ஜ்ஞானம் மூலமாக ஸாக்ஷாத்கரிப்பிக்கும்.
5. தூமதி பெற்ற யோகி
6. கிருஷ்ணனால் கிருஷ்ணனைப் போல் யோகி துலங்குவான்.
7. ஜ்ஞானம் கலந்த கர்மயோகிக்கு எல்லாம் துலங்கும்.
8. ஜ்ஞானமானது ஸ்வயமாகவே ஸம்சயங்களை நீக்கித் தெளிவை உண்டாக்குகிறது.

***********

# 5. யோகமும் க்ஷேமமும்
## -- ஸ்ரீ ஸேவா ஸ்வாமி அருளியது

" யோகக்ஷேமம் என்பது, தனிப்பட்டவர்களின் யோகக்ஷேமத்தோடு நிற்கக்கூடாது;
அது போதாது ; நாம் எதைச் சார்ந்து இருக்கிறோமோ அங்கும் யோகக்ஷேமம் நிலைக்கவேண்டும்;
ஸம்ப்ரதாயம் -----நமது ஸம்ப்ரதாயம் நிலைக்கவேண்டும்; நிலைத்து வாழவேண்டும்;
ஸம்ப்ரதாயத்தில் உள்ள எல்லாருக்கும் ஸம்ப்ரதாய ஜ்ஞானம் வளரவேண்டும்; ஒரு சிலரோடு நிலைத்து நிற்கக்கூடாது

வாதங்கள், விவாதங்கள் ஸம்ப்ரதாயத்தில் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யாது;

"எல்லாம் தெரியும் என்று சிலர் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள்;
ஆனால், முக்யமான அம்சங்களில் அடிப்படை விஷயங்களே தெரிவதில்லை;
அஹங்காரம் சில இடங்களில்; ஆணவம் சில இடங்களில் ; அபிமானம் சில இடங்களில்
இவற்றால் ஸம்ப்ரதாய ஜ்ஞானம் இல்லாமல், உபயோகமற்ற நிலையை அடைந்து விடுவார்களோ என்கிற சந்தேகம் எழுகிறது.
யோகக்ஷேமம் ----புதிதாக வருவதும், வந்தது நிலைப்பதும்-- ஸம்ப்ரதாயத்தை அநுஸரிப்பதால் வரும்;
அதனால் ஒவ்வொரு க்ருஹமும் ---ஸம்ப்ரதாய பாடசாலையாக மாற வேண்டும்;
குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் வித்யார்த்திகளாக மாறவேண்டும்
அவர்களுக்கு, அடிப்படையான ஸம்ப்ரதாய விஷயங்கள் போதிக்கப்படவேண்டும்

குடும்ப அங்கத்தினர்கள், ஸம்ப்ரதாயத்தை அறிந்து அநுஷ்டித்தால் , அதன்படி நடந்தால், அது ஸம்ப்ரதாய யோகக்ஷேமம் .

அந்தக் குடும்பத்தில், வரும் ( யோகம் ) இதுவரை வந்தவைகள் குறையாமல் நிலைத்து நிற்கும் ( க்ஷேமம் )

இது யோகக்ஷேமம்



# 6. இதர முத்துக்கள்



**ஆததாயிகள் ஆறு பேர்கள் என்று சாஸ்த்ரம் கூறுகிறது.**

**1.உயிருக்கும் பொருளுக்கும் நெருப்பு வைத்துக்குலைப்பவர்கள்.**

**2. வஞ்சகமாக விஷம் வைத்து கொல்ல முயலுபவர்கள்**

**3. அஸ்த்ர சஸ்த்ரங்களோடு வீணாக படையெடுத்துவருபவர்கள்**

**4. பிறருடைய செல்வத்தை வஞ்சகமாக பறித்துக்கொள்பவர்கள்**

**5. பிறருடைய பூமியை வஞ்சகமாகப் பறித்துக்கொள்பவர்கள்.**

**6. பிறருடைய மனைவியைப் பறித்துக்கொள்பவர்கள்.**

---

**பாஞ்சராத்ரா ஸம்ஹிதை**

**ஸ்ரீரங்கத்திற்கு ரங்கநாதனை ஆராதிப்பதற்கு ஐந்து கோத்ரத்தார்கள் பெருமாளோடு கூடவே வந்ததாக ஸம்ஹிதையிலிருக்காம். ஆகையால், அவர்களைத் தவிர மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் ரங்கநாதனை ஆராதிக்கக் கூடாதாம்.**

*पञ्चायुधांशास्ते पञ्चशाण्डिल्याश्चौपगायनः ।

मौञ्ज्यायनःकौशिकश्च भारद्वाजश्च योगिनः ।

**ஐந்து கோத்ரத்தார்கள் :: சாண்டில்யர், ச்யோபாக்யனர், மௌன்ஜ்யாயனர், கௌசிகர் பாரத்வாஜர்**

*****************************************************************************************